25.11.2024 OS.No.41/2016 PW4 Name :.**சத்தியமூர்த்தி**

9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சி சம்மன் எதுவும் வரவில்லை. நீலம்மாள் சொல்லிதான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இந்த வழக்கில் நான் 4வது சாட்சியாக உள்ளேன். இதற்கு முன் சாட்சியம் அளித்துள்ள மூன்று நபர்கள் பற்றி எனக்கு தெரியாது. நீலம்மாள் இந்த வழக்கில் 38 நபர்கள் மீது வழக்கு போட்டுள்ளார். சத்தியமூர்த்தி, உதயகுமார், அசோக்குமார், ஜெயின், ரீனா, ஆகியோர்கள் பெயர் தான் எனக்கு தெரியும்.
2. நீலம்மாள் எந்த சர்வே எண் சொத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. முதல் விசாரணை பிரமாண பத்திரத்தை வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்து வழக்கறிஞர் கையெழுத்து போட சொன்னார் போட்டேன். அதில் உள்ள விவரங்கள் சௌந்தர்ராஜனுக்கு தான் தெரியும். கீதா என்பவரை சாட்சியாக விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. நாங்களே கூட்டிகொண்டு வருகிறோம்.
3. கீதா வீட்டில் சீட்டு நடத்தி வருகிறார். சுமார் 10 ஆண்டுகளாக நடத்தி வருகிறார். 2013ல் நான் அவரிடம் ஒரு சீட்டு கட்டி எடுத்தேன். ரூ.1,00,000/–த்திற்கான சீட்டு ஆகும். என்னுடன் 20 நபர்கள் சீட்டு கட்டினார்கள். அவர்கள் சௌந்தர்ராஜன் வேறு நபர்கள் பெயர் தெரியாது. எனக்கும் உதயகுமாருக்கும் தனிபட்ட முறையில் விரோதம் இல்லை. எங்களுக்கிடையில் லேவாதேவி எதுவும் இல்லை. சீட்டு எடுத்ததற்கு ஆவணம் எதுவும் இல்லை.
4. சீட்டு கட்டியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. A

மற்றும் B செட்டியூல் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. சொத்துகள் யார் யாரிடம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. சத்தியமூர்த்தியிடம் நீலம்மாளும் சௌந்தர்ராஜனும் ரூ.4,00,000/– கடன் வாங்கினார்கள். சௌந்தர்ராஜன் என்னிடம் வேலை செய்கிறார். அந்த விவரத்தை பிரமாண பத்திரத்தில் கூறவில்லை. பிரமாண பத்திர்த்தில் என்னுடைய முகவரி எக்லாஸ்புரம் என்று குறிப்பிடபட்டுள்ளது.

5. வடக்குபட்டி என்று தான் குறிபிடபட்டுள்ளது. நீலம்மாள் வாங்கிய கடன் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. அந்த கடன் பத்திரத்தை நான் இதுவரை பார்த்ததில்லை. அது பதிவு செய்யபட்டதா இல்லையா என்பது குறித்தும் யார் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்பதும் எனக்கு தெரியாது– வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. மூல பத்திரங்களை பற்றி எனக்கு தெரியாது. அடமான கடன் பத்திரம் எழுதினார் என்றும் கிரையம் என்றும் எழுதவில்லை என்று எனக்கு நன்றாக தெரியும்.

6. நீலம்மாள் தகுந்த பிரதிபலனை பெற்றுகொண்டுதான் சொத்தை விற்றுள்ளார். அதை வைத்து தான் மற்றவர்களுக்கு சிறிது சிறிதாக சொத்து விற்கபட்டுள்ளது. வெள்ளை தாளில் கையெழுத்து பெற்று மோசடி செய்ததற்கு காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பொதுஅதிகார பத்திரம் மோசடியாக எழுதி கொடுத்ததற்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை. குற்றசாட்டிற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வேலுர் எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

7. மனு நகல்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் இ–சேவை மையம் உள்ளது. வாட்டர் டேங் உள்ளது. மத்திய மாநில அரசு திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்று வீடுகள் கட்டபட்டுள்ளது. வழக்கு பற்றி தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 25/11/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/B.ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.